உ

சிவமயம்

வெள்ளூர்

உடையவர் கோவிலென்று வழங்கும்

ஸ்ரீ சுவேதபுர க்ஷேத்திரத்

# தோத்திரப் பிரபந்தம்.

இது

பாணூர்

மிழலைக் கூற்றத்து வேளாண் குலதிலகரும் வித்வசிகாமணியும்

முத்துப்பிள்ளை என்று பிள்ளைத்திருநாமம் வாய்ந்தவருமாகிய

ஸ்ரீமத் முத்துராமலிங்க சுவாமி அவர்கள்

குமாரரும்

பரிமணகுடியில்

திருக்கோவில் கொண்டெழுந்தருளியிருக்கின்ற

பரமசற்குரு சுவாமிகளை

திருவடித்தொண்டு பூண்டொழுகுபவரும், சிவநேயச் செல்வரும்

ஆகிய

**ஸ்ரீமாந் முத்துப்பிள்ளை அவர்களால்**

இயற்றப்பெற்று,

இராமநாதபுரம்

சமஸ்தான வித்துவானும்

சிதம்பரம்

ஸ்ரீ மீனாக்ஷி காலேஜ் தமிழ்ப்பண்டிதருமாகிய

கோடகுடி

**சே. சர்க்கரை இராமசாமிப்புலவரால்**

பரிசோதித்து

மன்னார்குடி

சம்பகலக்ஷ்மி விலாச அச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பெற்றது.

1922.



உ

சிவமயம்

ஸ்ரீ பரமகுருவேநம:

இப்புத்தகத்திலடங்கியவை.

# வெள்ளூர் உடையவர் கோவிலென்று வழங்கும் சுவேதபுரஸ்தலவாசக்


கடவுள் வாழ்த்து

சித்திவிநாயகர் மாலை

சிதரேச்சுவரர் திருவிரட்டைமணிமாலை

சுகந்தகுந்தளாம்பிகை பதிகம்

சிங்காரவேலவர் தோத்திரக் கண்ணிகள்

சிங்காரவேலவர்தோத்திர ஆனந்தக்களிப்பு.

உ

சிவமயம்

## சிறப்புப்பாயிரம்

யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணை

மஹா மாட்சிமைதங்கிய வித்வசிகாமணியாகிய

சுவாமிநாதபண்டிதரவர்கள்

இயற்றியது.

பூவியு நாவியும் பொருந்துபுத் தெளிருந்
தாவியும் வாவியுந் தாடலை தருவிக்
காண்டல் செல்லாக் கடவு ளடியார்
வேண்டல் செய்ய விழுமிய வரங்கள்
உள்ளுநர் கருத்தினூஉங் குதவி யண்ணிய
வெள்ளுநருடையவர் கோயின் மேவிப்
பன்னீர் சக்கரன் பருக்கைக் கற்கள்
பொன்னீர் மணல்பால் பொலிசுவைக் கண்டு
திராட்சைப் பழங்கள் தீவிய கன்னல்
இராட்சத சஞ்சீ மெறும் வலிப்பூதி
ஆகும் வண்ண மற்புத மியற்றி
மேவும் பத்தர் விரத முற்றுபு
திப்பிய வருணனி செய்கவி வாத
சுப்பிர மணிய சுவாமி மீது
சாத்திரக் கருத்தமை தோத்திரக் கண்ணியும்
ஊனந்தவிர்த்தரு ளானந்தக் களிப்பும்
அதியுறு சீதரே சுரர் துணைத் தாளில்
வதி யிரட்டை மணிமாலையு மாலையில்
யிந்தளப்பண்ணளி யிசைக்குஞ் சுகந்த
குந்தளாம்பிகை பதிகமுங் கோடொன்
றேந்துவிநாயகரி யற்றமிழ் மாலையும்
தீந்தமிழ்க் கடவுள்வாழ்த் தியல்களும் பகர்ந்தனன்
அதிகமாமன்பினை யறுமுகற் காற்றிவாழ்
மதியுறுபுலமையன் மற்றையன் யாரெனில்

தவாதுதாய்முலை நைவரச்சுரத்தலின்
சுவேதநதிதொடச் சுரந்துசென்மிழலை
நாட்டுப்பாணூர் நண்ணுவேளாளர்
கோட்டமில்குலத்து வாட்டமிறிலகன்
முத்துப்பிள்ளையென்ன மொழியும்

முத்துராமலிங்கசாமி
செய்தவத்துதித்த கைதவமில்லோன்
தருமணமலர்தரும் பரிமணங்குடியுறை
பரமசற் குருபாதம் பேணி
வரமதுற்றிடு மாண்டகுவள்ளல்

தந்தைசொன் மந்திரந் தானெனக்கொண்டோன்
மந்திரந்தாயென மதித்திடுமுரவோன்
சுந்தரப்புலவரைத் துதித்திடு தூயோன்
மூத்துப்பிள்ளையென்னும்
சுத்துக்கொள்ளைச் சால்புடையோனே.

உ

சிறப்புப்பாயிரம்

# தேவிகோட்டை

ஸ்ரீ. வன்றொண்டரவர்கள் மாணாக்கருளொருவரும்

திருப்புத்தூர்ப்புராணம், சூதவனபுராணமுதலிய பலநூலாசிரியருமாகிய

காரைக்குடி,

ஸ்ரீமாந். ராம. சொ. சொக்கலிங்க செட்டியாரவர்கள்

இயற்றியது

உலகினிடைத் திருக்கோயிலுறப் பெருவெள்ளார்களுட்கா
வண்ணம்
உலகினிலெவ்வூர்களையு முடையவர்வாழ் வுடைமையினா
லுள்ளாரென்றே
உலகமெலாங் கொள்ளாரென்று யறஞ்சால் வள்ளாரென்று
வரிசூழிவ்
வுலகர்பணி நள்ளாரென் றுரைப்பருஞ்சீர் வெள்ளாரென்
றொளிருமோரூர்.

இத்தகைய திருப்பதியிலென்றும் வீற்றிருந்தருளுமறு
முகத்துச்
சித்திவிநாயகப்பெருமான் சீதரேசுரரெனும் பேர்திகழ்மா
தேவர்
கொத்தலர்கள் கொள்சுகந்த குந்தளாம்பிகையினைய கும
ரர்நயப்பண்
வைத்துமகிழ் சிங்கார வடிவேலரடிசார்பாமாலை தந்தான்.

நாமவிநீர் திகழ்மிழலை நாட்டிலகு பானூரி னண்ணுமுத்து
ராமலிங்கர் தருதனைய னவில்பரம குருசாமிநயந்துதந்த
தேமவியாசருள் பெற்றோன் சித்தாந்த சைவநலத் திறனே
சேர்ந்து
காமவிசேயருள் விளக்கங்கண்டுமகிழ் முத்தையனுங் கவி
வல்லோனே.

## சிறப்புப்பாயிரம்

இஃது

ஸ்ரீமாந். கு. கா. அடைக்கலப்புலவர் அவர்கள்

இயற்றியது.

உலகவாரிதி பறவை விலங்கு நடனம்மாதருள்ள மென்றுஞ்
சலனமிலா தொரு வாறிற்றங்கிடவும் பக்கியமே தனியூனுண்ணுக்
கலனணியன் மீயுறுகண் ணுணயலின் மனைமனங்கட் கண்ணுறுத
பலகலைக ணிறைமதுரா புரியாயனகாதனிற் பரிசுவாய்ந்தே.

கோலநெடு விழிமாதாம் கடைவிட்டருகு மறைக்கூட்டம் விட்டே
சாலவைம்பாற் பிரமாஞ்சூழ் தாவிரித்துத் தானிருப்பந் தன்மை
பீலிமஞ்ஞைகாணியதன் பேடைமயிலெலவை ணைத்துப்பிரித்தன்று
சோலையுறு நாணிநலஞ் சூழ்மறைமாணுயோர் கடுதியோரேத்த

விரவுபுகழ்க் கல்வியற் மேம்பட் டெம்மாறு மங்குமேவுனீராற்
பாணுரென்றுறைகெழு சீர்சாலு நகரியற்றிய மெய்ப்பதிவிருலோ
சுரந்துநறை சொரிசை வந்துலங் குறநற்றே வனம்பாற்
சொரியன் பாலோ
நிரந்தர நற்கலைப்புலவர் நெடுங்கால மியற்றியநன்னெறியாலன்றே

வந்துதித்துக் கலைப்பொருளு மிலக்கணமு மிதிகாசு மறிந்தே
கற்றோர்
சிந்தையுவக் கவ்வினையப் பொருளுரைத்துச் சைவதவத்திருநீறே
வந்தமததிலக மென்ன வைந்தெழுந்தாணுத் தடங்கண்டாருமீறுப்
பந்தமறுப்பான் மூத்துப்பிள்ளை செய்தநற்றவமே பலித்ததென்ன

அனைவயெல்லா முடையோனுயந் நாமமேயாகி யறியாசாரு
நனைவதீரமினைப்பொன்றூற் பதமூதவிக் கடவுளர்க்கும் நன்மையீந்
குனைவமாழை நிறைவெள்ளூர் க்ஷேத்திரத் தோத்திரந் தமிழி
ற்குறிப்பாராய்ந்து
வளைகவி யோருளநாண வழகுத்தி யொடுகவின வறைந்தான்
மன்றே

யாழ்ப்பாணம்

தெட்சணப்புலோலி

மகா-ா-ா ஸ்ரீ தா. முருகேசபிள்ளை உபாத்தியாயரவர்கள்

இயற்றியது.

சீரேறு பாண்டிவள நாட்டினிற்றிலகமாய்ச் செப்புவெள்
ளூர் புரத்திற்
செந்தமிழுணர்ந்திடுஞ் சுவேதகேதுப் பெயர்ச்சேழியனுக்
செய்த பணியாஞ்
சினகரந்தன்னிலே சீதரன்பூசனை சிறக்கமூன்றுற்றியிட்ட
சித்தகளெலாம்பெற்ற சீதரேசுவரனைச் சேவைசெய் பிர
பந்தமொன்

றேரேறுமன் பிணலாக்கி யீந்திடுக வென்றீசனடியார்கள்
வேண்ட
விகபரசுகத்தினுக் கொருமித்த வித்தென விலகுநற்புனித
நடையான்
எழிர்பரிமணங்கூடி யிடத்திலொளிமயமாகி எழுபாகுரு
ஸாமி யினிணையடி களனுதினமு மறவா தியற்று பணியிலகு
பூசோபதேசன்

பேரேறுமேழி விருதுடைய வேளாளர் குலப்பிரபலச்
சுகுண சைவப்
பிரபுவாய்ப் பரனூரிலவதரித்தக் கமணிபிறழாக் கனத்து
முத்துப்
பிள்ளையினருந்தவப் பிள்ளையாய் வந்தவன் பேணுமெய்ச்
சங்கமுதல்வன்
பேசருமிலக்கண விலக்கிய முணர்ந்து நூல்பேசு நாவல்ல
தகையன்

காரேறுமிகிலனைய கொடையுளானென்னையுங் கண்ணென
மதிக்கு நண்பன்
கருதிமெய்யன் பாதுதி கூறித்துதிக்கவே கருணையொடி
யற்றிநாமங்
காட்டிச்சுவேதபுரமான் மியப்பிரபந்தக் கட்டளையாங்கேற்
றினன்
கலைவிரித்துணரும்வன் புலவருக்கரியெனக்காணு முத்துப்
பிள்ளையே.

சிறப்புப்பாயிரம்

மஹாமாக்ஷிமை தங்கிய

ஸ்ரீமாந் நெல்வேலி வீர. கருத்தாபிள்ளையவர்கள்

இயற்றியது.

திருமருமார்பன்றினகரன் செழியன் சேவை செய்த வள மாநகரின்
ம மலிகுழலம்பிகை யான்மூதலோர் மகிழ்பிரபந்தத்தை வகுத்தா
னருள்புரி வடிவேற் பரமசற்குரு வினருச் சுகனருந்தமி ழாய்ந்தோன்
மூருகவிழ் பொழில்சூழ் பாநகர்வாசன் முத்தையபிள்ளை என்பவனே.

உ

இராமநாதபுரம்

ஸமஸ்தான வித்துவானும்

சிதம்பரம்

ஸ்ரீ மீனாக்ஷி காலேஜ் தமிழ்ப்பண்டிதருமான

கோடகுடி

மகா-௱-ஸ்ரீ சே. சர்க்கரை இராமசாமிப்புலவரவர்கள்

இயற்றியது.

பூவார்கமலச்சேக்கையெல்லாம் பொற்காலன்னமடைகிடக்கும்
புனலார்வயலிற்செந்நெல்கரும் புக்குநிகராம்வெள்ளூரிற்
புவனந்தோன்றும்பொழுதுதித்த புராணன்றிருமால்வழிபாடு
புரிந்துவரங்கள்பெற்றதனாற் பொருவில்சீதரேசனெனப்
புகழாசபிதானம்புனைந்த புராரிசுகந்தகுந்தளையாம்
பொருப்பன்மகளைவிருப்பினிடப் புறத்திலிருந்துங்காமாரி
பொலிவெஞ்சுடரோனிம்பமலர் புனையுஞ்சுவேதகேதுபவம்
பொடிக்குந்தடமுந்திருத்தளியும் போற்றிச்செயமுன்வா மளித் தோன்

பாவார்சுவே தநதி நீத்தம் பாயுமிழலை நாட்டூரு
பாரிநிகர்வேளாளருக் கெப்பயெனு முதவுங்கயிலாய
பதிமுப்போகவிளை நெற்குப்பத்திலிருந் தெங்குடிமுழுதும்
பரிபாலிக்கு மளகேசன் படியிலுயர் மீன்பூசல்வளம்
படைத்த பாமந்தூர்ப்பதி வாழ்பகவன்றளிஎல்லாமணிகள்

யதித்துப்புதுக்கி விதிப்படி கும்பாபிடேகஞ்செய்துவிழாப்
பண்ணுமேகாம்பர கிருபன் பற்றுற்றடியேற்றவர்கற்
பகமாமேந்தல் புத்திர சம்பத்தையடையு மார்க்கம் வெள்ளூர்த்

தேவார்சிதம்பரேசருக்குத் திருத்தொண்டியற்ற லெனக்கொண்டு
திருவாரிசவிபுட்கரணி செந்நெல் விளையூர் நந்தவனப்
தேசுமலியும் பரிவாரதே வருறையுள் மதிலொழித்
தியனைமித்யபூசை வாழாதியற்றி மேடமதிதோறுந்
திருவிழாச்செய்திடத்தே வேந்திரசெல்வமுஞ் சற்புத்திரரும்
சிந்தைமகிழக் கொடுத்தவர்க்குத் தீர்க்காயுளு மீந்தருளீசன்
செம்பொற்பதத்திலரட்டை மணிச்செய்யுள் மாலைநறுங்கூந்த
றேவிபதிகங்கணபதிதாள் சேருந்திருத் தோத்திரமாலை

காவார்தரு சிங்காரவயிற் கடவுள்கண்ணியானந்தக்
களிப்புப் பாடியறங்கேற்றிக் கலங்காநெறியிற் கருத்தமைத்தான்
கதிர்வேலவனை திருவுருவங்காந்தோர் பரமகுருவாகிக்
கவியிற்றடுத்தாட்கொள்ள முப்போகம்மார் பரிமணங்குடிவாழ்
கடவுள்பூசை புரிசீலன் கலைதேர் முத்துப்பிள்ளையெனக்
கழறுமுத்திராமலிங்கக் கனவான்றவத்தில் வருசுமுகன்
கந்தக்கடவுள்வந்தெவையுங்கனவிலுரைக்கப்பெறுங்கல்விக்
கடலாமுத்துப்பிள்ளை கவிக்கரசன் பாணூர்க்காவலனே,

சிறப்புப்பாயிரம் முற்றிற்று.

# தற்சிறப்புப்பாயிரம்.

## ஆசிரிய விருத்தம்

திருமவுலி சூடியிமை செழியன் மகளாயரசு செய்பாண்டி
வளநாட்டிலே
சிவஞான குருவாய்க் குருந்தருகிலான்மேசர் திகழ்பெருந்
துறையினுக்குச்
செப்புமொரு காதங்கிழக்கினிற்நசாதன் செம்மனுண்டா
க்குகோடித்
தீர்த்தத்தின் மேன்மையொடு வழுதிமந்திரி குலச்சிறை
நாயனாரும் வித்வப்
பெருமையாவற்ற தலையொட்டிடத் தமிழ்யாடு பெயர்
கொளொட்டக்கூத்தனும்
பிறந்த மணமேற்குடியினுக்கு முக்கடிகையாப் பேசு மேற்
றிசையிலுஊமயாற்
பெற்றசாபத்தினை யுருத்திரகற்றிநற்பேறு பெறவில்வவன
மார்
பிஞ்ஞகன் மஞ்சக்குடிக்கு நாற்கன்னற் பிறங்குமுத்தர
திசைதனி
லிருங்கிலங்காவல்புரி யிறைசுவேதகேது முனியற்றுந்தவத்
தினால் வந்
தெய்து வெள்ளாற்றின் றெனாது வெள்ளூரிலே யிலகு
முடையவர் கோவிலிலன்
றெங்கனும் பெயரோங்க வோராயிரத்தினோ டெட்டுச்சிவா
லயத்தி
னேற்ற மிகுமூர்த்திதீர்த்தந்தல விசிட்டங்களெல்லாமொரு
ங்கேயமைந்
தருள்பெருகும் சைவசமயாசாரி வாதவூரடிகடிருவாசகத்
தின்
னகவலிற்பாடலது பெறுசீதரேசனுடன் மருஞ்சுகந்தகுந்த
ளாம்பிகை கணேசனணிமாதி சித்திகளையாக்கு சிங்கார
வேலர்
அருள் பெறிப்பாமாலை சூட்டினன் பாணூரிலமரு முத்துப்
பிள்ளையே

சிவமயம்

ஸ்ரீபரமகுரவே நம:

## சற்குருவணக்கம்

சத்திதரித் தறுமுகமாய்த் தாரகத்தி னுட்பொருளைத் தாதைக்கோது
வித்ததிருக் கோலமெடுத் திடும்பனவ வீரரொடு மேவி யட்ட
சித்திபுரிந் தடியவர்க டிமிரமல வினைகடிந்து சிவமெய்ஞ் ஞான
முத்தியருள் பரிமணமா நகர்ப்பரம குரவனடி முடிக்கொள்வாமே

## அவையடக்கம்

ஓசையொலி யும்பொருளு முமையீச னென்னமறை யுரைத்தலால்யான்
பேசலென் னோர் பேச்சுமிலை யெனத்துணிந்து கல்லாத பித்தனேனுங்
காசினியிற் பாடவறி யார்பமனைப் பாடுகெனக் கழறல் கேட்டே
யாசையினுற் றோத்திரப்பா மாலைபுனைந் தணிந் தானை யருச்சித்தேனே

## வெள்ளூர்

உடையவர் கோவிலென்று வழங்கும்
ஸ்ரீ சுவேத புரஸ்தலவாசக்
கடவுள் வாழ்த்து

## விநாயகர்காப்பு

திருவளர்மா லாதிபல தேவர்முனி வார்பூசை செய்துபோற்றும்
பொருவறுசீர்த் தவளபுர க்ஷேத்திரத்தோத் திரந்தமிழாற் புனைதல் செய்ய
வொருவிறிருக் கருணைமத மழைபொழிந்தே தொண்டருளத் தலவு மைங்கை
மருவுகஜா னனவீர சித்திவிநா யகன்பதத்தை வணங்குவாமே (1)

## சரசுவதி

பொன்னங்கமலப் பொகுட்டினமர் புத்தேளுவிற் குடியிருந்தாய்
மன்னுங் கலைநூ லாகமங்கண் மறையா திகளின் வடிவானாய்
பன்னுந் தவள பூடணத்தாய் பதுமாசனத்தாய் பாரதியா
மன்னே யெனக்குத் தமிழ்ப்புலமையன்பீந் தருள்கூர்ந் தாளுனவ
யே (2)

## சித்திவிநாயகர்

வேதநவி னான்முகற்குச் சிருட்டி யீந்தாய் விண்டுவின்கட்
செவிச்சாப விணைக டீர்த்தாய்
கோதறுமிந் திரன்காழிப் பூம்பொழிற்கே குறுமுனிகெண்
டிகைகவிழ்த்தாய் குருமெய் கண்ட
நாதனவ்வை கபிலனைமு னுண்டாய் நாரை நகர்நம்பி யமுதமுண்
டாய் நம்பு மென்றன்
றீதகற்றி யருள்வதென்றோ வெள்ளூர் மேய சித்திவிநா யக
னென்னுந் தேவதேவே (3)

## சீதரேசுவரர்

பொன்னிதழிச் சடிலமுமுக் கண்ணுஞ் சூலப் பொருபடையு
மழுமானும் புரிமுன் னூலு
மன்னுமயிற் குகமகவை யணைத்த செங்கை மருவாருங் குழல்பாக
வனப்பு மாய்வந்
துன்னுமடி யவர்க்கிட்ட சித்தியெல்லா முதவியுறு பவப்பிணியு
மொழித்தன் றோருக்
கின்னுறவிர்த் திடவெள்ளூர் வாழுஞ் சீத ரேச்சுரன்பொற் பத
வனச மேத்து வாமே (4)

## சுகந்தகுந்தளாம்பிகை

செங்கமல மலரயனு மாலுங்காணுத் திருமவுலிப் பதவுகளன்
சீதரேசன்
பங்கமர்ந்தைந் தொழின்முறைமை நடத்தி யன்பர் பல்பிணியி
னோடு பவப்பற்றை நீக்கிக்
கொங்கலர்பூம் பொழிற்றவளத் திருநகர்ப்பொற் கோவில் விளை
யாட்டியற்று குறையாவீரத்
துங்கவலங் காரவயி லோனையீன்ற சுகந்தகுந்த ளாம்பிகைதா
டொழுதுய்வாமே (5)

## நடராசமூர்த்தி

அரிபிரமா தியர்தொழப்பொ னம்பலத்தே சிவகாமி யம்மைகாண
விருமுனிவர் துதிபுரிய வியற்றுநட னக்கோல மெய்தியன்பர்
தரிசனைசெய் திடவெள்ளூர்த் தலத்தினிலா திரைநாளிற் றனி
விழாக்கொள்
வாமுதவு நடராசர் மலரடிவாழ்த் திப்பவநோய் மாற்றுவாமே (6)

## சிவகாமியம்மை

வானமுத லைம்பூத மயவகில சரமசரம் வகுத்தலாதி
யானபஞ்ச கிருத்தியங்க ளாற்றிமணி மன்றுணட மாடுமேலா
ஞானபர மானந்த நிருத்ததரி சனந்தவள நகர்க்கா ணன்பர்க்
கீனமின்மெய் வீடருளுஞ் சிவகாமி யம்மைபத மிறைஞ்சு
வாமே (7)

## திரிபுரசம்மாரமூர்த்தி

கலைமதி யிரவி யுருளையம் புவிதேர் கந்துக மறைகள்சா ரதிசெம்
மலசய னுக மேருவில் வளைத்து மாயனும் வெங்கணை தொடுத்
தெல்
விலகுமுப் புரம்புன் முறுவலா லெரித்தே யீறின்மெய் யன்பர்மு
வருக்கு
நலமளித் தென்று முடையவர் தளிவாழ் நாயகன் பதந்துணை
நமக்கே (8)

## திரிபுரசுந்தரி

கற்பனை யன்றிச் சகமுள தன்றுக் காட்டிமும் மலவிரு ளோட்டித்
தற்பர ஞான சற்குரு பரையாத் தத்துவ மசிப்பொரு டேற்றி
யற்புத வடியர் தம்மையீடேற்றி யருள்புரிந் துடையவர் தளிவாழ்
பொற்பமை புரமூன் றட்டசுந் தரிதாள் போற்றிவெம் பிறவி
மாற்றுதுமே (9)

## சோமாஸ்கந்தமூர்த்தி

இரசிதவெற் பிருந்துமைமை யாளோ டேற்றி னிவர்ந்து வந்து
சரவணத்தி னிலகு செவ்வேற்
காமுறுசுந் தரமுருகக் கடவு டன்னைக் கவினுறத்த மிடை
வைத்துக் களிப்பின் மேவு
திருவுருவ முடன்வெள்ளூர்ச் சினக ரத்திற் சித்திரைநாட் பூர
ணையிற் றேரூர்ந் தன்பர்க்
கருள்புரிசோ மாஸ்கந்த மூர்த்தி பொற்றா ளனுதினமும் பாவ
வினை யகற்று வாமே (10)

## சந்திரசேகரமூர்த்தி

பொருவிறலம் புரிதக்கன் சாபத் தாலம் புலியொளிதேய்ந் தபயு
மெனப் போற்றக் கொன்றை
மருவுசடி லத்தணிந்து வளர்ந்து தேய்ந்திவ் வாறகக் கலையென்
று மாறு வண்ணங்
கருணைபுரி கோலமுடன் மேட மாதங் கரிமுதல்வா கனப்பவனி
க் காட்சி யீந்து
தரிசனந்தந் தடியவர்க டமையாள் பாண்டூர்ச் சந்திரசே கர
னிருதா ளலைக்கொள் வாமே (11)

## ஜ்வராபக்னமூர்த்தி

மால்சீதச் சுரத்தினைத்த னுஷ்ணசுரத் தான்மாய்த்தே வயங்கு
மூன்று
கால்சிரநாற் புயங்கொணவ விழிவடிவங் கண்டிறைஞ்சு
க்கண்ணன் பாலிக்
கோலமது பூசித்தோர் கொடுநோய்தீர் வரமதனைக் கொடுத்தே
வெள்ளூ
ராலயத்தின் வீற்றிருக்குஞ் சுரந்தீர்க்கு மூர்த்திதிரு வருள்சார்
வாமே (12)

## ஸந்த்யாநிருத்தமூர்த்தி

கடல்விடமுண் டுலகறியக் களத்திருண்மைத் தரிமுதற்புங்கவர்கள்
கூப்பத்
தடவரையும் பிகையொருபா லுறத்திரயோ தசிமாலை தனிவா
னந்த
நடனமிடும் படிவெவாடுவெள் ளூரின்மதிக் கிருபவனி நயந்தெஞ்
ஞான்று
மடியவருக் கருண்மூர்த்தி பதத்துணையெ னகத்தினைவிட் டகன்
றிடாவே (13)

## தெக்ஷிணாமூர்த்தி

வடவாலின் கீழமர்ந்து தென்பாலின் முகமாகி மனவாக்கெட்டா
முடிவான பொருணிலையைச் சனகாதி யோர்க்குரையா மொழி
யினாலே
இடமாய்ச்சின் முத்திரையாற் சிவயோகி யாயுணர்த்தித் தேற்றி
யாண்ட
உடையார்கோ விற்பரம குரவனைநா டொறும்பரவி யுய்கு
வோமே (14)

## வைரவமூர்த்தி

மொழியாத சிவநிந்தை மொழியயனுர் சிரத்தையுகிர் முனையி
னூற்கொய்
தழகுறுகைத் தலமேந்திச் சூலமெடுத் தரிமுதலோ ரகந்தை
நீக்கி
யொழிவிறவ மடந்தையரைக் குறுநகையான் மயலூட்டி யுலக
மெல்லாம்
வழிபடவெள் ளூரிலமர் வயிரவமூர்த் தியைவாழ்த்தி வணங்கு
வாமே (15)

## ஸ்ரீ சிங்காரவேலவர்

ஆரணடிதாழ்ந் திருண்மலச்சீ வரைப்படைத்த ளிக்குதலெவ்
வாறதெனு மம்மைதன்னை
யிருகூறுய்த் தனதிடப்பா லொன்று மற்றொன் றிலகுசிறு மதலை
யென விளைத்துச் சத்தி
மருவுமயில் மயிலினையுங் குகனுநாமம் வைத்துதவி யாசுபுரி
வாயென் றேவத்
திருவருள்கூர்ந் துடையவர்கோ விற்கண் மேய சிங்கார வேல
னடி சிரங்கொள் வாமே (16)

## தெய்வயானையம்மை

கொங்காரந் துழவணிமான் மகளாகிச் செயுந்தவத்தாற் குலிசன்
றன்பாற்
பொங்கார்வப் புதல்வியென வளருதிபொன் னூட்டிடரைப்
போக்கிச் சூர
சங்காரம் புரிந்துமன்றன் முடித்தமென வுரைத்துவெள்ளூர்த்
தலத்தின் வெற்றிச்
சிங்கார வேலர்திரு மணம்செய்தெய்வ குஞ்சரிதாள் சிரங்கொள்
வாமே (17)

## வள்ளியம்மை

கிரிவளைக் காத்தவனேன் பாற்றிருமான் வயிற்றுதித்துச்
சிற்றூர் வேட
மகிபன்வளர்த் திடப்புனங்காத் தெயினனெனக் கிழவுருவ
மாகப் பல்காற்
குகனயந்து மணமுடிப்ப வரமதுபெற் றுடையவர்பொற் கோ
வின் மேவி
யிலமுழு தாள்வள்ளி யம்மைதிரு வருளினையா மடைந்துய்
வாமே (18)

## திருநந்திதேவர்

வாதரா யணனு ரணன்பர மெனச்சூள் வழுத்திடத் தம்பமாய்
நிறுவி
யோதருஞ் சிவமெய்ஞ் ஞானநூன் முனிவர்க் குணர்த்திநல்
லுடையவர் தளியிற்
சிதலைச் சுரற்கு வாகனந் துவசஞ் சேவகங் காவல்வெள்
ளிலைகா
யீதலா தியவைந் தொழில்புரி நந்தி யெம்பிரான் பதங்களைத்
துதுமே (19)

## நவக்கிரகதேவதைகள்

பானுகலை மதிசெவ்வாய் பண்டிதன்பொன் புகர்மந்தன் பணியி
ரண்ட
தானதமன் சிகியென்ன வறையுநவ தேவர்நிறையாயுள் செல்வம்
ஞானமகப் பேறுமனை மாட்சிமுத லாபவெலா நல்குவாரால்
வானவர்க டுதிதவள புரத்தளியிற் றயைவந்து வணங்குவார்க்கே
(20)

## திருஞானசம்பந்தர்

உமைதருமெய்ஞ் ஞானவமு தருந்தி யீச னுதவுதா ளச்சிவிகை
யூர்ந்து சைவ
சமயநிலை பெறவழுதி சுரநோய் மாற்றிச் சமணர்களைக் கழுவே
ற்றித் தமது தொண்டி
னமைமணவைக் குலச்சிறையா ரியர்தற் சூழ வாறுடனே சுகந்
தருந்த ளாம்பி காமே
விமையவர்வந் தனைசெய்வெள்ளூ றெய்துங் காழி யிறைவனிரு
பதமலரை யேத்துவாமே (21)

## திருநாவுக்கரசர்

ஐந்தெழுத் துண்மை யுணர்ந்துவி பூதி யக்கமா மணிவடம் புனைந்து
சிந்தையுண் மகிழ்ந்து திருவையா றதனிற் சிவபுர தெரிசனம் புரிந்து
நந்தணி காத்தன் பணிதரு முடைய நாயக னடியிணை மறவாச்
செந்தமிழ் நாவுக் கரசர்பொற் கமலச் சேவடித் துணை துணை நமக்கே (22)

## சுந்தரமூர்த்தி

பூவல ரிதழிச் சடிலனல் கியசெம் பொன்மணி யாற்றிலிட்டாரூர்
வாவியி லெடுத்துச் செங்கலைக் கனக மாக்கியே வெங்க ராப் பிடித்துண்
டாவிபோ மதலைக் குயிரளித் தீச னடிமற வாதுவெள் ளூர்வாழ்
நாவலர் பெருமான் றிருவடிக் கமல நாண்மலர் சென்னிசேர்த் துதுமே (23)

## மாணிக்கவாசகர்

தென்னவன்மந் திரியாகிப் பரிகள் வாங்கச் சென்றுபெருந் துறையீசன் சிவமெய்ஞ் ஞானந்
தன்னையுப தேசிக்கத் தமிழ்வே தத்தைச் சாற்றியுடை யவர் கோவில் சார்ந்து பாண்டூர்
மன்னுபுக ழீண்டவிருந் தென்று பாடி மணிமன்று ளாடிபத மருவப் பெற்ற
பன்னுமலர்ப் பொழில் வாத வூரர் பாதம் பணிந்துவினை கடந்து முத்திப் பதிசெல் வாமே (24)

## குலச்சிறைநாயனார்

கொந்தவிழும் பொழின்மணமேற் குடியதனி லவதரித்துக் கூடற் றென்னன்
மந்திரியாய்ச் சைவநெறி தழைத்திடச்சம் பந்தரடி வணங்கி யாரூர்ச்
சுந்தரனூற் பெருநம்பி யெனப்புகழப் பெற்றுவெள்ளூர்ச் சோதி முக்க
ணந்தணன்று ளிணைசேர்ந்த குலச்சிறைபொற் பதத்துணையெ னகத்த தாமே (25)

## சண்டேசுரர்

மண்ணிநதிக் கரையார்த்தி மாநிழலின் மணலிலிங்கம் வகுத்துப்
பூசை
பண்ணுமதற் கிடையூறு புரிதாதை தாளைமழுப் படையான்
வீட்டிக்
கண்ணுதலா னுண்ணமுது பரிவட்ட நல்கிநறுங் கடுக்கை சூட்ட
நண்ணுமருட் டவளபுரச் சண்டேசப் பெருமான்று ணயந்துய்
வாமே (26)

## மயில்

கண்டவெண் மதியச் சடிலனு முமையுந் துணைக்கையி னெடு
த்தும்மார் பணைத்துக்
கொண்டுமுத் தாடுஞ் செங்கதிர் வேற்கைக் குமரவேள் குரை
கழற் சுமந்தே
தொண்டர்க டமக்குக் காட்சியீந் தென்றுந் துணைசெயுந் தவள
நன் னகரத்
திண்டிறற் கலப மரகத மயிலென் சிந்தைநீங் காதனு றின
மே (27)

## வேல்

குன்றெறிந் தடற்சூ ரகனரி வதனன் குரைகடற் கொக்குரு
வாகி
நின்றம ருடற்று சூரபன் மாதி நிசிசர குலங்களை வீட்டி
மன்றல்சேர் வாகை வனைந்துவெள் ளூரின் வளர்குகன் றிருக்கர
மருவு
வென்றிவேற் படையைக் கைதொழு மவரே வெம்பவங் கடந்த
மே லவரே (28)

## வீரவாகுதேவர்

விண்ணவர்போற் றிடுசெவ்வேள் பணிமேற் கொண்டு வீரமா
மகேந்திரத்தின் மேவிச்சூர்மு
னண்ணுபுவா னோர்சிறைவி டாயேற் கந்த நாதனையின் மடிக்கு
மென நவின்றெ திர்த்த
திண்ணியவல் லரக்கருடன் பானு கோபன் றிறலறச்செற் றருளி
விடுசிங் கார வேற்கை
யண்ணலடி தொழுதுவெள்ளூர்ப் பதியின் மேவு மடல்வாகு
தேவரு ளடைகு வாமே (29)

## இடும்பன்

மலயமுனி குகனருளாற் கந்த வெற்பின் மணிமுடியிற் சத்திசிவ வரைவையத்தி
னலமருவு பூர்ச்சவனம் வைத்தே கொண்டு நண்ணுநெறி மந்திரமு நவிலச் சென்று
வலமையினிற் சுமந்துவந்து பழநிசேர்ந்து வடிவேலன் றளிக் காவல் வரம்பெற் றென்றும்
புலவர்தொழு முடையவர்கோ விற்கண் மேய புயபலவல் லிடும்பனையாம் போற்று வோமே (30)

கடவுள் வாழ்த்து

முற்றிற்று

உ

கணபதிதுணை

ஸ்ரீ பரமகுருவேநம:

வெள்ளூர்

உடையவர் கோவிலென்று வழங்கும்

சுவேதபுர க்ஷேத்திரத்தின் கண்ணமர்ந்த

சித்தி விநாயகர்

பதிகம்

## கட்டளைக்கலித்துறை

பொன்னவிர் மாமகு டங்கரி யானனம் பொங்குமங்கை
மன்னிய பாசாங் குசம்வர தாபயம் வாய்ந்திடவந்
தின்ன லகற்றுநின் றுண்மற வேனைய னீன்றதெய்வ
விண்ணுத லார்தொழ வெள்ளூ ரமரும் விநாயகனே (1)

மட்டவி ழுங்கம லாசன னறியர் வந்துவழி
யட்டிடு மூக்கட் சிவக்களி றேகொடும் பாழ்முமலக்
கட்டினி லேயுழல் வேனையுஞ் செம்பொற் கழலுதவி
விட்டுவி டாதருள் வெள்ளூ ரமரும் விநாயகனே (2)

மாதவன் கெண்டியி னீர்கவிழ்த் திந்திரன் வைத்தசெழும்
போதவிழ் நந்த வனங்காத் தனையரி போற்றவரு
சீதர நாதன் புதல்வவென் மேற்றயை செய்துசென்ம
வேதனை தீர்த்தருள் வெள்ளூ ரமரும் விநாயகனே (3)

நெஞ்சகக் காட்டினி லைம்புல வேடர் நெருங்கிமகா
வஞ்சக மாயறி வாங்கலை வெளவி வருத்துகின்றா
ரஞ்சலென் றேவந் தடியே னிடர்தவிர்த் தாண்டருள்வாய்
விஞ்சு வளங்கெழு வெள்ளூ ரமரும் விநாயகனே (4)

அரிய செழுந்தமி ழவ்வைமெய் கண்டா னருட்கபிலன்
புரிபூ சனைமகிழ் பூரண னேகொடும் போரவுணக்
கரிமுக னைப்பொரு தூர்திகொ டேவ கருணைசெய்வாய்
விரிமலர்ப் பூம்பொழில் வெள்ளூ ரமரும் விநாயகனே (5)

அற்புத நாரை நகர்நம்பி யூட்டு மறுசுவையின்
பொற்பமை யும்மமு துண்டவ னேயன்பர் பூசனைசெய்
கற்பக மேசரண் காத்தருள் வாய்கவி ஞர்கனக
வெற்புவில் லான்றரு வெள்ளூ ரமரும் விநாயகனே (6)

கமலா சனற்குச் சிருட்டிதந் தாயரி கட்செவியி
ணமைசாப நீக்கினை யாகண் டலற்கு மருள்புரிந்தா
யுமையா டருமைந்த வோங்கார ரூபவி னும்பர்தொழும்
விமலநின் றாட்சரண் வெள்ளூ ரமரும் விநாயகனே (7)

புண்ணிய நீறணிந் தைந்தெழுத் தோதிநின் பொன்னடிக்கே
தண்ணிய மாமல ரர்ச்சனை செய்வாரந் தந்தருள்வாய்
கண்ணுதற் செங்கரும் பேகமலத்திருக் கண்ணன்முதல்
விண்ணவ ருந்துதி வெள்ளூ ரமரும் விநாயகனே (8)

திக்கின ரேத்து திருமா னடஞ்செய்து சேவித்திடச்
சக்கர மீந்த தயாநிதி யென்றுநின் றாளடைந்தேன்
மைக்கட் சுகந்த குழளு யகியருள் மைந்தவன்பர்
விக்கினந் தீர்த்திட வெள்ளூ ரமரும் விநாயகனே (9)

புனைமலர் கொண்டடி போற்றுமெய் யன்பர் புகலும்வரந்
தனையட்ட மாசித்தி முத்தியை நல்குந் தயாநிதியே
யினைபவ வேலையின் வீழ மெனைக்கரை யேற்றியிரு
வினைதவிர் வீடருள் வெள்ளூ ரமரும் விநாயகனே (10)

மொழிமுத் தமிழுஞ் சிவஞானச் செல்வமு மூண்டகத்தாள்
வழிபாடு செய்யும் வரமும் பிணியற்ற வாழ்வுமென்று
மழியாத முத்தியுந் தந்தடி யேனைத்தண் ணார்கருணை
விழிநோக்கி யாண்டருள் வெள்ளூ ரமரும் விநாயகனே (11)

சித்தி விநாயகர் பதிகம்

முற்றிற்று

திருச்சிற்றம்பலம்.

சீதரேச்சுவரர்

திருவிரட்டை மணிமாலை

விநாயகர்

சீர்சால் சுவேதபுரச் சீதரே சக்கடவு
ளேர்சால் செழுந்தமிழ்ப்பா யான்பாட—நீர்சாலுஞ்
செஞ்சடில னல்குமிட்ட சித்திதரு மைந்துகரக்
குஞ்சரங்காப் பாகுமென்றைக் கும் (1)

நூல்

வெண்பா

திருவளரு மார்பனன்பாற் சேவித்து வேண்ட
வருள்சீத ரேசுரப்பே ராகிப்—பெருமைத்
தவளபுரக் கோவிலமர் தற்பரவெண் ணீற்றுப்
பவளநிறத் தாய்கடைக்கண் பார் (2)

கட்டளைக்கலித்துறை

யாராதி யண்டம் படைத்தவென் றூயொரு பங்கதனிற்
சோராதி யந்தமில் யாண்டே ரெனுந்த்வ்ய தேசவதி
காரா தினகர சோதியி னுயெனைக் காத்துவார்
தாரா திருப்ப தழகோ வுயர்ந்தநின் றண்ணருட்கே (3)

வெண்பா

தண்ணிதழிச் செஞ்சடையாய் தாபதர்கள் பூசிக்க
நண்ணுஞ் சுவேத நகருடையாய்—பண்ணார்
சுகந்தகுந்த ளம்மைபங்கா தூயா தமியே
னகந்தனின்மெய்ஞ் ஞான மருள் (4)

### கட்டளைக்கலித்துறை

அருள்பெறத் தீர்த்தமொன் றூற்றிப் பரிதி யானிரவி
யுருகுமெய் யன்பினிற் செய்வழி பாட்டை யுவந்தருளி
மருமலி புங்குழ லாளுடன் மேவு வளத்தவளத்
திருநகர்ச் சீதா காதவென் றூற்பவத் தீங்கிலையே (5)

### வேண்பா

இல்லையுன்பொற் பாதமல ரேத்தி னிடர்ப்பவமுன்
றொல்லைவினை யோடு துறுபிணியு—நல்லவருட்
சம்பந்தர் போற்றுந் தவளபுரத் தாய்தமியேன்
வெம்பந்தந் தீர்தெய்வமே (6)

### கட்டளைக்கலித்துறை

தெய்வத் தசரதன் சேயாக்கு தீர்த்தத் திருமணவைச்
சைவக் குலச்சிறை யாசருள் பெற்றுமுன் றன்சிரமேற்
கைவைத் திறைஞ்சுஞ் சுவேத புரத்துக் கடவுடன்பால்
மெய்வைத்த வன்பர் தமதிடை யூறு விலகிடுமே (7)

### வேண்பா

விலகலற வெத்தலமு மேவிப்பூசித்த
பலனனைத்தும் பாண்டூர்ப் பரமன்—மலரடியைச்
சித்திரா பூரணையிற் சேவித் திடிற்பெறுவர்
சத்தியமா மிவ்வசனந் தான் (8)

### கட்டளைக்கலித்துறை

தானந் தருமந் தவஞ்செய்து சைவத் தலங்கள் சுற்றி
ஞானம் பெறுமா தவச்செல்வ மேன்மையு நண்ணுவரா
லூனந் தெறுமுடை யார்கோவில் சென்றங் கூனப்பணிநு
வானந் தடிவைப்பி னின்புகழ் யார்சொல வல்லவரே (9)

### வேண்பா

வல்லமன வாக்கான் வழிபடுமெய் யன்பாள
ரல்லற் பவநோய்க் கருமருந்தா—நல்லதிரு
வாதவூ ரார்பழிச்சு மன்னுபுகழ்ப் பாண்டூர்வாழ்
நீதரே சாகிருபை செய் (10)

கட்டளைக்கலித்துறை

செய்யவெள் ளாறு பெறுஸ்ரீவேத கேது திருப்பணியை
மெய்யன்பி னாற்செய்து போற்றவன் னோன்பேர் விளங்குறவிவ்
வையகஞ் சொல்லு முடையவர் கோவிலின் வாழ்மழுமான்
கையவென் றேதுதி செய்யின் வரான்கொடுங் காலனுமே (11)

வெண்பா

காலன்விழச் செற்றபதக் கஞ்சத்தாய்க் காமனைவெல்
பாலவிழி யைக்கொள் பரஞ்சுடரே—மாலயனார்
வந்தனைசெய் வெள்ளூரின் வாழ்கருணை வாரிதியே
சந்ததமு நின்றாள் சரண் (12)

கட்டளைக்கலித்துறை

சரணெனத் தன்பதந் தாழ்வோ ருடற்பிணி சன்மவெந்நோய்
மரணந் தவிர்த்துமீ ளாக்கதி யுய்த்திடு வாளிரவி
கிரணமு மொப்பில் சுவேத புரத்தளிக் கீர்த்தியினிற்
றிரணமுஞ் சொற்றிட வல்லா ரவர்சிவ தேசிகரே (13)

வெண்பா

தேசமுழு தாண்டுமன்னர் செங்கோ னடாத்துவதும்
பாசமகல் யோகம் பயின்றுதவ—ராசனெனத்
தங்குவது மற்றுந் தவள்புரத் தற்பரன்பொற்
பங்கயத்தாட் போற்றும் பலன் (14)

கட்டளைக்கலித்துறை

பலமே யளிக்கும் பாசிவற் கேவழி பாடுசெய்யும்
மலமே துமிக்கும் பிருகாதி வேத மகாதவர்க்கு
நலமே யருளர்த்த நாரீச வாலிய நன்னகாரந்
தலமே யமருநின் றுடுதி செய்வாரந் தந்தருளே (15)

வெண்பா

தந்தருள்வாய் வெள்ளூர்வாழ் தற்பரபொற் கோவில்வலம்
வந்திடுதல் செந்தா மரைப்பதத்தைச்—சிந்தை
நிதமுந் தியானித்த னின்னுமை நீங்காத்
துதிபுரித லென்னுந் தொழில் (16)

கட்டளைக்கலித்துறை

தொழுவருள் சித்திரைப் பூரணை தன்னிற் சுவேதபுரத்
தழகுறு முற்சவங் கண்டே திருக்குளத் தாடிவெள்ளை
மழவிடை யானை மருவார் குழலினை வாழ்த்தினிப்பார்
முழுவதுங் காத்தறஞ் செய்தே பெறுகுவர் முத்தியுமே (17)

வெண்பா

முத்தியுண்டாஞ் சித்தியுண்டா மூவுலகாள் மொய்ம்புமுண்டாம்
புத்திரப்பே றுண்டாம் புகழுமுண்டாம்—சத்திகொண்ட
சிங்கார வேலன் றிருவிளையாட் டாற்றுவெள்ளோர்
கங்கா தரவென்றக் கால் (18)

கட்டளைக்கலித்துறை.

கால்கள் தளர்ந்திரு கண்ணுஞ் சுழலவெவ் காலனுமென்
பால்வந் திடர்செய நண்ணுமவ் வேளையிற் பால்விடையின்
மேல்வந்து காட்சி கொடுத்தருள் வாய்மலர் வேதனொடு
மால்வந் தனைசெய் சுவேத புரத்தமர் மாமணியே (19)

வெண்பா

மாவரம்பெற் றண்டர்களு மாதவத்தோ ருந்தினமுஞ்
சேவைபுரி பாண்டுபுர க்ஷேத்திரப்பொற் — கோவிலமர்
செம்பவள வண்ணமுறு சீதரசா வருணின்
வம்பவிழும் பொற்றாண் மலர் (20)

கட்டளைக்கலித்துறை

மலரய னுக்கனு மால்காப்பும் வெள்ளோர் மருவுநின்று
ணாலமா ருச்சனைப் பேறெண்ணி னென்னை நவிபவச்சஞ்
சலவினை மாற்ற வுனக்கரி தன்றிரு தாளிலடைக்
கலமெனக் கீமரு வார்குழல் போற்று கழற்றிருவே (21)

வாழ்த்து

வைய முய்குக வான்மழை பெய்குக
பொய்யில் வாய்மைப் புரவல னோங்குக
மெய்யன் புற்றுச்சு வேத புரந்துதி
செய்யுந் தொண்டர் திருவுற வாழ்கவே. (22)

சீதரேச்சுவரர்

திருவிரட்டைமணிமாலை

முற்றிற்று.

உ
சிவமயம்

# ஸ்ரீ சுகந்த குந்தளாம்பிகை

## பதிகம்

### சித்தி விநாயகர் காப்பு

பத்தி யாகப் பணியுமெய் யன்பர்க்கு
முத்தி சித்தி முதலிய நல்கியே
உத்தி யான வுடையவர் கோவில் வாழ்
சித்தி யைங்கரன் சேவடி போற்றுவாம் (1)

திருவமுத மொழுகுமுழு மதிமுகமும் வெண்ணகைச் செம்
பவள வாயு நுதலிற்
றிலகமு மியற்கைநறு மணமருவு குழலும்வார் செவியின்
மணியொளிர் கம்மலும்
அருள்பெருகு விழியிணையு மஞ்சுகக் காதலமு மம்பொற்
கலிங்க விடையு
மாரவட முடனுத்த ரீயமங் கலநாணு மணிசெய் மரகத
வடிவமாய்
மருமலியு மிதழிபுனை சிதசேச சக்கடவுள் வாம பாகத்
தணுகியே
வழிபடு பவர்க்கட்ட மாசித்தி முத்திகள் வழங்கு கருணை
நிதியமே
சுருதிமுடி நடனமிடு முனது திரு வடிபாவு தொண்டனேனன்
றன்னை யாள்வாய்
சுபகர மிகுந்தவள புரமதின் மகிழ்ந்துறை சுகந்த குந்தள
வம்மையே (2)

வழுதிமலை யத்துவசன் மாதவப் பேற்றினான் மகவென வள
ர்ந்து வெயில்சால்
மணிமுடி புனைந்துசெங் கோலோச்சி யரசுரிமை வழிமுறை
நடாத்தி யுலக
முழுவதுந் திக்குவிச யம்புரிந் திசைவென்றி முரசமொடு
கயிலை யணுகி
முன்புவந் தெதிர்நந்தி யாதிய கணத்தர்போர் முனைசாய்த்
தடைந்த முக்கட்
குழகற்கு மணமாலை சூட்டித்த னிறைமுறைசெய் கோனுக்கி
மதுரை நகரிற்
குறையாத ஜெயவலங் காரவடி வேலுக்ர குமரனை யளிக்கு
நினையே

தொழுதிடச் சிந்திக்க வகலாத செந்தமிழ்த் தோத்திரம்
புகல வருள்வாய்
சுபகர மிகுந்தவள புரமதின் மகிழ்ந்துறை சுகந்த குந்தள
வம்மையே (3)
முன்புபுரி யிருவினைக ளான்வரும் பிறவியென் மொழிகருங்
கடலி நடுவண்
மூவாசை யாஞ்சுழித் தலையகப் பட்டுழலு மூடனே னுஞ்சி
றியனை
யின்புறு நிராசையாங் கரையின்மெய்ஞ் ஞானவீ டெய்தும்
வழியைக் காட்டியே
யிணையிலின் றிருவருட் புணையின்க ணேற்றிவிட் டிடர்தவிர்த்
தாண்ட ருளுவாய்
அன்புநீ ரபிடேக மாட்டித் தவச்சாந்த மலர்சூட்டி யுள்ள
மெனுமோ
ராலயந் தன்னின்வழி பாடாற்று யோகியர்த மறிவினிறை
தெள்ள முதமே
துன்பமிவ் வேயற்ற நிறையாயுள் செல்வநற் சுகவாழ்வு
தருதெய்வமே
சுபகர மிகுந்தவள புரமதின் மகிழ்ந்துறை சுகந்த குந்தள
வம்மையே (4)
கள்ளமெவ் விடயவஞ் சக்கொடியர் மனமென்ற கடிமனையின்
மாயை யிரவிற்
கண்ணைந்து புலவாயின் வழிபுகுந் தறிவெனுங் கனிதிப்
பொக்கி டத்தைக்
கொள்ளைகொண் டிடர்புரிந் திடநலிந் துடனடுக் குற்றனனை
மேயநின் னையே
கூவினு மேழையிடல் கேட்டுநீ தன்செவி கொடாதிருப் பதுத
ருமமோ
தெள்ளுமறை முடிவின்க ணடனமிடு முதல்வியே சிகரவரை
யிறைபு தல்வியே
திகழுமகி லாண்டம் படைத்தன்பு முதலைந்தொழிற் செய்திடு
பரா சத்தியே
தெள்ளுமான் மழுவேந்து சிதமேச் சுரனுயிர்த் துணைவியே
புணைநம் பினேன்
சுபகர மிகுந்தவள புரமதின் மகிழ்ந்துறை சுகந்த குந்தள
வம்மையே (5)
கங்கையணி சடிலனே காம்பரக் கடவுளைக் கச்சிமா வடிநீழலிற்
கண்ணுருச் சனைபுரிந் தென்னுன் கறத்தைதவள் காருண்ய
மாத வசிவ

மங்களகல் யாணிகா மாட்சிசொக் கேசர்மகிழ் மதுரையா
சாட்சி காட்சி
மரகத சொரூபமீ னாட்சிவிண் ணவரெலாம் வாழ்த்த மகிடா
சூரனைச்
சங்கரித்திடு விசா லாட்சி பஞ்சாட்சர சடாட்சர கடாட்சி
நெடுமா
றங்கையென் றுனதுபய பங்கயத் தாளையான் சந்ததம் பணி
ய வருள்வாய்
துங்கமா முகவனொடு சிங்கார வேலவனைச் சுதரென வள
ர்க்கு மனையே
சுபகர மிருந்தவள புரமதின் மகிழ்ந்துறை சுகந்த குந்தள
வம்மையே (6)

வையகந் தன்னிற் பிறந்திடிற் றெரிசிக்கின் மனநினைத் திடி
ன்ம ரிக்கின்
வான்கதி தருந்தலப் பேற்றையொரு காற்கோவில் வலம்வரு
பவர்க்க ருளுவாய்
மெய்யன்பி னிற்சோம வாரநெய் விளக்கமிடின் மிடிபோக்கி
வாழ்வ ளிப்பாய்
மேடமதி நிறைதிங்க ளுற்சவங் கண்டவர்தம் வெவ்வினைப்
பவமொ ழிப்பாய்
செய்யரவி புட்கரணி தீர்த்தமதின் மூழ்குறிற் செய்தபா
வந்து மிப்பாய்
சிவபரம வோமெனச் சிந்திப்ப வர்க்கிட்ட சித்திக ளெலா
ங்கொ டுப்பாய்
துய்யநின் புகழ்புகற லயனுக்கு மரிதென்னிற் சொல்ல வென்னா
லாகுமோ
சுபகரமிருந்தவள புரமதின் மகிழ்ந்துறை சுகந்த குந்தள
வம்மையே (7)

புதுமதிப் புருவவில் வளைத்துவெங் கொடுவிடம் பொழிவிழிக்
கணைதொ டுத்துப்
புகல்வஞ்ச கச்சம ருடற்றிமட வாரெலாம் புரிமாய வேத
னையினின்
மதிமயங் காவண்ண நின்றுமெய்ஞ் ஞானமெனும் வலியபடை
கொண்டு வென்று
வளருமெய்ச் சிவயோக தவவாழ்வு பெறவெனையுன் மலரடிக்
காளாக் குவாய்
பதுமா சனத்திருவு நாமகளு மேத்தும் பதாம்புய பாசத்
திறற்

பக்தசன பரிபாலி துட்டரைவெல் திரிசூலி பரமகிரு பானு
கூலி
ஆதிபுரியும் விபுதர்கட் குபகாரி சிவபாஞ் சுடர்க்கிறைமை
தருகௌ மாரி
சுபகர மிகுந்தவள புரமதின் மகிழ்ந்துறை சுகந்த குந்தள
வம்மையே (8)

மடலவிழ் செழுங்கமல மலரிரவி புட்கரணி வண்புனல் படி
ந்து மேட
மதியினுறை திங்களூற் சுவமிதரி சனஞ்செய்ய வருகின்ற மாநி
லத்தோர்க்
கிடர்புரி கொடும்பிணிகள் குருடுசெவி யூமைமுத லெவ்வினையு
நீக்கி மைந்த
ரில்லாத மலடியர் மகப்பேறு பெறுவரமு மீந்திணையில் சித்தி
பலசெய்
தடல்விடையி னிவர்சீத ரேச்சுரப் பெருமான்ற னருகினுறை
செல்வி னின்பொ
னம்புயச் சேவடியை நம்புமடி யேன்பவ மகற்றிமெய்க் கதிய
ருளுவாய்
தொடர்பாச மகல்விக்கு மான்மேச னெடுபெருந் துறையில்வ
ளர் யோக மயிலே
சுபகர மிகுந்தவள புரமதின் மகிழ்ந்துறை சுகந்த குந்தள
வம்மையே (9)

தெண்டிரைக் கங்கைமுத லாந்தீர்த்த பலனிரவி செய்தபுட்
கரணி நல்குஞ்
சிவதல மெலாம்புக்கபேற்றையுடை யவர்கோவில் செல்வனடி
வைப்பினுதவுங்
கொண்டமெய்த் தவராஜ யோகியரு மரிதினிற் கூடுபர கதியு
மொருகாற்
கும்பிட் டுணைப்பூசை புரியிலெளி துறுமகிமை கூறுதற் கெளி
தா குமோ
வண்டுளப மால்பரிதி வாசவன் பிருகுமுனி மணவைக் குலச்சி
றைதிரு
வாதவூ ரார்ஞான சம்பந்த ரன்பினொடு வழிபடல்செய் சிவசத்
தியே
தொண்டர்க ளகத்துதய மெய்ஞ்ஞான பானுவே துரியங்
கடந்த பொருளே
சுபகர மிகுந்தவள புரமதின் மகிழ்ந்துறை சுகந்த குந்தள
வம்மையே (10)

வெல்லரிய மாமாயை விகற்பனையினான் வினையிற் பிராரத்த
னாகி
மித்தைப் பஞ்சமதை நித்திய மெனக்கருதி விடயமுடலாசை
வெந்நோய்
யல்லற் கிடந்துழலு மடிவில்சிறி யேனைநி னருட்கடைக் கண்
ணோக்கியே
அஞ்செழுத் தோடதி யளித்தமல சுகவீட்டி னனுபவ மதை
யு தவுவா
யெல்லையறு ஞானபர மானந்த வாரியே யிமையவர்க் கதிகா
ரியே
யிணைவிழிக் கருணைகொடு மதனரி யுடனின்ற விறைவியே
யின்ன தெனலாச்
சொல்லரு சிதாகாச திருநடன தெரிசனந் தொழுதொழுகு
சிவகாமியே
சுபகர மிருந்தவள புரமதின் மகிழ்ந்துறை சுகந்த குந்தள
வம்மையே (11)

கைத்தலங் கூப்பிப் பணிந்துதிரு நீற்றினொடு கண்மணி புனை
ந்து பஞ்சாக்
கரமது நவிற்றியே யர்ச்சனை யுஞற்றிநின் கழலிணை தியானிக்
குமெய்ப்
பத்தியுந் தவயோக சித்தியுஞ் செந்தமிழ்ப் பாடல் புகலுஞ்
சத்தியும்
பாக்கியமு மாயுளா ரோக்கியமு மீந்துமல பரிபாகம் வரவ
ருளினாற்
றத்தொம சிவாக்யோப தேசம துணர்த்தியே தமியேனை
யாட்கொள் ளுவாய்
தானவர்க டனைவென்று வானவர்க டுதிகொண்ட சண்முகனை
யீன்றதாயே
சுத்தசிவ ஞானபர மாநந்த யோனகந் தொண்டர்க் கருத்து
முமையே
சுபகர மிருந்தவள புரமதின் மகிழ்ந்துறை சுகந்த குந்தள
வம்மையே (12)

வாழ்த்து

வாழிசித்திக் கணேசனருட் சிதமேசன் மருவசருங் குழலு
மையாள் வடிவேற் செல்வன்
ஆழியணி காஸ்பரிதி யிருகுகுலச்சிறைவின் னவர்களிறை
முசுகுந்த னடற்சவேதகேது

காழிக்க ளார்வாத லூரன்பர் சுடாயு கண்டுதரி சுனைபுரியக்
கருணைபதந் செயுமீ
ரேழுலகுந் தொழுசுவேத புரபதனைப் பரவு மீசனடி யவர்
மாரி யென்று மம் வாழியவே (13)

ஸ்ரீ சுகந்த குந்தளாம்பிகை பதிகம்

முற்றிற்று

உ

சிவமயம்

## ஸ்ரீ சிங்காரவடிவேலவர்

## தோத்திரங்கள்

### சித்திவிநாயகர்

மறைமுடிக்கட் பொருளாகி வடிவேலோன் றெடுத்தவுணர் வர்க்க
மெல்லா
முறைமுடித்துப் புலவரையாள் சுவேதபுரக் குகன்றமிழ்ப்பா
மொழிதல் செய்யக்
குறைமுடித்தன் பரைக்காக்குஞ் சுகந்தகுந்த ளாம்பிகையுங்
குளிரும் பிள்ளைப்
பிறைமுடித்த வேணியுமீன் றருள்சித்திக் கணபதிதாள்
பேணுவாமே (1)

### சீதரேச்சுரர்

பூவினி லயன்மா றுதிசெயத் தவள
புரத்திலேந் தொழின்முறை புரிந்தே
தேவியோ டமருஞ் சிவபரஞ் சுடரைத்
திமிரமும் மலமற மனமாங்
கோவிலி லிருத்தி யன்புநீ ராட்டிக்
கோதின்மா தவமலர் சூட்டி
யாவினை வேத்ய பூசைசெய் தழிவி
லறிவெனும் பதமடை வாமே (2)

### சுகந்த குந்தளாம்பிகை,

இந்திர சாலக் கனவுகற் பனையே
யிச்சகம் பொய்யென றேற்றி
யந்தமும் மலவல் லிருளற ஞான

யானுவா யிலகுமைந் தெழுத்துஞ்
சிந்தையு ணுணர்த்தித் தவளமா நகரிற்
சேவைசெய் பவர்க்கருள் சுகந்த
குந்தளாம் பிகைபொற் பதமல ரிணைக்கை
கூப்பிவல் வினைகடீர்ப் பாமே (3)

ஸ்ரீ சிங்காரவேலவர்

சந்த ஆசிரிய விருத்தம்

திருமணி யொளிவிடு மருமணு மயனொடு
சென்றே கொண்டாடுஞ்
செழுமல ரிருபதன் மரகத மயிலிவர்
சிங்கா ரன்சூரன்
றருமணி சமரினி லெதிர்சிசி சாரகுல
சங்கா ரன்கீரன்
றமிழியல் புனைமரு மலரணி குழலுமை
தன்பா லன்கோலக்
குருமணி வெயில்விடு பணிபல வணிதொடு
கொங்கா ரங்கோதைக
குறமகள் மகபதி மகடழு வுறுமெழில்
கொண்டா னுண்டாதார்
மருமல ரணியொழி லுடையவர் தளியில
மர்ந்தா னென்றேதாள்
வழிபட வெனதுள நிறைசிவ குமரன
வன்றூ னெங்கோனே (4)

உ

சிங்காரவேலவர்

தோத்திரக்

க ண் ணி க ள்

சீரார் சுவேதபுரச் சிங்கார வேலவன்ற
னேரார் தமிழ்க்குவர மீவாய் கணபதியே (1)
சிங்கார வேலவன்றன் செந்தமிழை யான்பாடக்
ங்கா தரனுமைசேய் கணபதியுங் காப்பாமே (2)

பூவிலயன் மான்முதலோர் போற்றுதுணைப் பொற்கமலச்
சேவடியை யான்மறவேன் சிங்கார வேலவனே (3)

ஆறு முகமிலக அள்ளிலைவே றாங்கி யெனைச்
சீறும் வினையகற்றாய் சிங்கார வேலவனே (4)

கந்தா சிவகுமாரா காங்கேயா நின்னடிமை
சிந்தா குலந்தவிர்ப்பாய் சிங்கார வேலவனே (5)

தாரகனைக் கொன்றமரர் தாள்பணியச் செய்யதிருச்
சீரலைவாய் வந்தமருஞ் சிங்கார வேலவனே (6)

தொண்டர்க் கெளியவனே தூயசிவ தேசிகனே
தெண்டா யுதந்தரித்த சிங்கார வேலவனே (7)

குன்றக் குடியிடத்துங் கோதிலடி யாருளத்துஞ்
சென்றுவிளை யாடல்புரி சிங்கார வேலவனே (8)

ஒப்பிலா மாமணியே யும்பர்தொழுஞ் சேவகனே
செப்பரிய நற்றவமே சிங்கார வேலவனே (9)

கங்கையுமை யாள்வளர்க்குங் கண்மணிநின் றஞ்சமெனச்
செங்கமலத் தாடொழுதேன் சிங்கார வேலவனே (10)

கார்த்திகே யாமுருகா காலனணு காதபவந்
தீர்த்தெனைநீ காத்தருள்செய் சிங்கார வேலவனே (11)

தாயா யனைத்துயிர்க்குந் தந்தையுமாய் நின்றவுமை
சேயா னுனக்கபயஞ் சிங்கார வேலவனே (12)

நித்தமுனை யேதுதித்து நேசித்துப் பூசனைசெய்
சித்த மெனக்கருள்வாய் சிங்கார வேலவனே (13)

வையகத்தி லுன்புகழை மாறுமற் பாடிடநின்
றெய்வ வருள்புரிவாய் சிங்கார வேலவனே (14)

பாமர னாயினுங்கண் பார்த்தெனைநீ காத்தருளிச்
சேமகர மேதருவாய் சிங்கார வேலவனே (15)

வள்ளிதெய்வ யானையொடு வர்ன்மயின் மீதில்வருந்
தெள்ளமுதே சுவேதபுரச் சிங்கார வேலவனே (16)

வாராய் மயின்மீது வந்தெனது வெம்பவநோய்
தீராய் திருவருளாற் சிங்கார வேலவனே (17)

அவஞான நீக்கியன்ப ரறிவினிறை வாகியருட்
சிவஞானந் தன்னைநல்குஞ் சிங்கார வேலவனே (18)

எத்தனையோ சொல்லியுமீ யெள்ளளவு மென்மீதிற்
சித்தமிரங் காதென்னே சிங்கார வேலவனே (19)

சூராதி வல்லவுணத் துட்டரைக்கொன் றண்டர்தொழச்
சீரார் பரங்கிரிசேர் சிங்கார வேலவனே (20)

பரம குருவாகிப் பவமகற்றிப் பொற்பாதஞ்
சிரமீது சூட்டியருள் சிங்கார வேலவனே (21)

துன்பவினை தீர்த்துனது தொண்டரொடு சேர்த்தெனையாள்
தென்பழநி யாண்டவருட் சிங்கார வேலவனே (22)

மடமையறுத் துன்னடிக்கே மாறாத வன்புமனத்
திடமுமெனக் கீந்தருள்வாய் சிங்கார வேலவனே (23)

கோதிலெழுத் தாறியம்பிக் குன்றுதொறுஞ் சென்றுதொழு
தீதில்வரந் தந்தருள்செய் சிங்கார வேலவனே (24)

வாவா வெனவழைக்க வர்ணமயின் மீதேறிச்
சேவையளித் தாண்டாயென் சிங்கார வேலவனே (25)

நானுன் னடிமையன்றோ நம்புமெனை யாள்வதென்றோ
தீன தயாளவருட் சிங்கார வேலவனே (26)

சோதி மயமாய்ச் சுகந்தகுந்த ளாம்பிகைசேர்
சீதரே சன்புதல்வா சிங்கார வேலவனே (27)

காரிருளா மாயையறக் கண்டருளாஞ் செங்கதிராச்
சேருநா ளெந்நாளோ சிங்கார வேலவனே (28)

காசினியோர் போற்றுசிவ கங்கையணி வேணியற்குத்
தேசிகனே வெள்ளூர்வாழ் சிங்கார வேலவனே (29)

வல்லவுணர் தங்குலத்தை மாய்த்தருளி யிந்திரன்விண்
செல்ல வரங்கொடுத்த சிங்கார வேலவனே (30)

அற்புதமா யம்புவியி லட்டமா சித்திபுரி
சிற்பரமே மெய்ப்பொருளே சிங்கார வேலவனே (31)

ஆடகநாட் டார்பரவ ஆறுபடை வீட்டிலும்வாழ்
சேடர்க் கதிபதியே சிங்கார வேலவனே (32)

தவமுனிவர்க் காயிடும்பன் றூன்கொண்டு வந்தசத்தி
சிவகிரியின் வீற்றிருக்குஞ் சிங்கார வேலவனே (33)

அருளிலக்கத் தொன்பதின்ம ரடிபரவக் கந்தவெற்பிற்
றிருவிளையாட் டேபுரியுஞ் சிங்கார வேலவனே (34)

சரவணப வாவெனகின் சண்முகக்கோ லந்தினைநான்
றெரிசனைசெய் தேத்தவருள் சிங்கார வேலவனே (35)

சிங்காரவேலவர்
தோத்திரக்
கண்ணிகள்
முற்றிற்று.

## சிங்கார வேலவர் தோத்திர

### ஆனந்தக் களிப்பு

திருமருவு சுவேதபுரம் வாழும் எங்கள்
சிங்கார வடிவேலர் மீதிலென் னூளும்
அருண்மருவு செந்தமிழைப் பாடச் சித்தி
யைங்கரக் கடவுடிரு வருளெனினை வாமே (1)

அம்பிமுக வன்சித ரேசன் எங்கள்
சுகந்தகுந்த ளாம்பிகை தோன்றல்குமரேசன்
செம்பொன்மல ரடியிணைகள் போற்றி வெற்றித்
திறலிடும்பன் நவவீரர் திருவருளை வாழ்த்தி (2)

வடிவேலர் செந்தமிழைப் பாட என்னு
வாக்கினிற் சால்வதியு நின்றுவிளை யாட
உடையவர் திருக்கோவிற் க்ஷேத்திரம் என்னின்
உம்பர்தவ முனிதினம் புரிகுவார் தோத்ரம் (3)

பாண்டிவள நாடது செழிக்கப் பாத
பத்மம் பணிந்தடியார் சித்தங் களிக்க
வேண்டிய வரந்தந்தே னூளும் சத்தி
வேலேந்தி மயின்மீ தமர்ந்துலகை யாளும் (4)

சுவேதபுர க்ஷேத்திரத்தின் பெருமை தன்னைச்
சொல்லவே சதுர்முகப் பிரமனுக்கு மருமை
அவனியி லிதற்கிணையொன் றின்று மனுவு
ஆயிரத் தெட்டுச் சிவாலயத்து ளொன்றும் (5)

மதுரையர சாள்சுவேத கேது குருந்த
வனமேவு மான்மேச ரிருபாதப் போது
துதிசெய்தவ மேன்மைவழி பாடு செய்து
தொல்லுலகி லேகொண்டு வந்தான்வெள் ளாறு (6)

வருநதிசங் கமங்காணச் சென்றான் செழிய
மாவனத் தமர்சீத ரேசலிங்கங் கண்டான்
தெரிசனை புரிந்துபூ சித்தான் கோவிற்
றிருப்பணியி னோடுதிரு நகரமும் வகுத்தான் (7)

அன்றுமுத லாயின்று காறு மவ்வூர்க்
கறைகுவார் சுவேதபுர நாமமனை வோரும்
கொன்றைபுனை யுஞ்சீத ரேசன் சுகந்த
குந்தளாம் பிகையினொடு யென்றுமதில் வாசன் (8)

செங்கண்மா றொழுதவாம் பெறலா லின்றுஞ்
சீதரேச் சுரனென வழங்குவது மதனால்
பொங்குதின கரன்வந்து போற்றி யிரவி
புட்கரணி யென்றபெயர் புனைதீர்த்த மாற்றி (9)
சிவனிரவி னிற்செய்தபி டேக மிட்ட
சித்திபெற் றுனின்றும் பெற்றவ ரனேகந்
தவமார் பிருங்கு புருகூதன் ஞான
சம்பந்தர் வாதவூர் மேவுகுரு நாதன் (10)
குறையா வரங்களவை பெற்றார் மணமேற்
குடிக்குலச் சிறைநாய னாரும்வழி பட்டார்
சிறிதுமதின் மேன்மையெவர் சொல்வார் என்றுஞ்
சித்திரா பூரணை மஹோற்சவமுங் கொள்வார் (11)
பஞ்சமூர்த் திகள்பவனி வருவார் அளவில்
பக்தசன கோடிகட்குத் தெரிசனமுந் தருவார்

செஞ்சரண மலரது துதிப்பா ரிகத்திற்
செல்வமொடு மழிவில்சிவ லோகத் திருப்பார் (12)

வல்லிடும்பன் காங்கூப்பித் தாழவீர
வாகுமுத லோரிலக்கம் படைவீரர்சூழ
உல்லாச மயிலிலமர் காட்சி யுரைக்க
வொண்ணாது சிங்கார வேலனார் காட்சி (13)

சற்கரைசெந் தேன்புனுகு சந்தம் பன்னீர்
சண்முகற் கபிடேக மின்னமு மனந்தம்
பொற்கலிங்க மணியாரம் பூணுஞ் சத்தி
புதல்வனழ கினைக்காண விழிகள்பல வேணும் (14)

சோடசோ பசாரநை வேத்யம் வாச
தூபதீ பாராத னம்மேள வாத்யம்
பாடுவார் திருப்புகழ்ச்சங் கீதம் அளவில்
பக்தகோ டிகள்பெறுகு வார்வரப்ரசாதம் (15)

பொருவிலிமை யவர்முனிவர் வந்தே யிரவி
புட்கரணி தீர்த்தமதில் ஸ்நானம் புரிந்து
சரவண பவாவென நவின்று கந்தன்
சகஸ்திர நாமார்ச்சனைகள் புரிகுவார் நின்று (16)

சித்திரா பூரணையி னாட்டம் எங்கள்
சிங்கார வேலவர் மஹோற்சவங்கொண் டாட்டம்
எத்திசையுங் காவடியி னீட்டம்வீதி
யெங்கணு முழங்குவது பலவாத்ய கோட்டம் (17)

அரகரசி வாயவென்று பாடிக்கந்த
னாலயத் திற்குவழி கூடிவிளையாடி
வருகின்ற காவடி யிலட்சம் சத்தி
வடிவேல ரவரவர்க் கும்புரிவார் கடாட்சம் (18)

அங்கப்ர தட்சணங்கள் வருவார்மாத
ரளவில்திரு மாவிளக் கேற்றிவலம் புரிவார்
சங்கீதை மேளமு முழங்கும்சிவ
சண்முகக் கடவுடிருச் சன்னிதி விளங்கும் (19)

மணலைச்சர்க் கரையாக்கிக் கொடுக்குஞ் சமைத்த
மாசுணங்கள் படம்விரித் தாரழலி னடிக்கும்
அணிமாதி சித்திகளைக் காட்டு மணலை
யள்ளிவெண் ணீறென வளித்துவினை யோட்டும் (20)

சமைத்தமீ னுயிராகித் துள்ளும் பச்சைத்
தண்ணீரைப் பாலாக்கி யபிடேகங் கொள்ளும்
அமைத்தபாற் காவடியொ டாடி மூட்டு
மக்கினியின் மூழ்கிவரு வானந்தகோடி (21)

வகிர்ந்து சமைத் திடுசேவற் கூவும் உடல்கொள்
வடிவேலிற் சகடையொடு காவடிகண் மேவும்
குகன்றனற் புதவட்ட சித்தி மகிமை
கூறவெளி லாதிசே டற்குமிலை சக்தி (22)

கண்குருடு செவிடூமை மாறும் பொல்லாக்
கஷ்டமூறு குஷ்டமுத லுற்றபிணி தீரும்
வண்செல்வ நிறையாயு ளோங்கும் மகவில்
மலடியர் மகப்பேறு பெறுவரிடர் நீங்கும் (23)

வல்வினை நவக்கிரக தோஷங் கொடிய
வாதேவல் பில்லிகொடு வஞ்சப்ப சாசம்
அல்லலகல் வித்தரு ளளிக்கும் விடவெவ்
வரவபயம் யமவாதை யணுகா தொழிக்கும் (24)

அஷ்டமா சித்தியுங் கைகூடுந் தரும
அர்த்தகா மியமெய்தி யடைவருயர் வீடும்
இஷ்டமா யவரங் கொடுக்குங் கந்த
னிணையடிக டுதிபுரியு மடியா ரெவர்க்கும் (25)

ஓம்சரவ ணோத்பவா வென்றே யீச
னுமைகுமரன் வளருமுடை யவர்கோவில் சென்றே
தீமைக ளகற்றிவரங் கொண்டே என்றுஞ்
சிங்கார வேலனடி சிந்தனைசெய் வாமே (26)

வேலுமயி லுந்துணையென் றேத்திக் கந்தன்
விளங்குதிருக் கோவில்தனை வலம்புரிந்து போற்றிச்

சீலமிகு குகனருணை வாழ்த்தி என்றுஞ்
சிங்கார வேலனடி சிந்தனைசெய் வாமே (27)

பரமசற் குருவாகி வந்தோன் ஆத்ம
பரிபால னணுவுக்கு ளணுவாய் நிறைந்தோன்
தெருளுமறை முடியினி லமர்ந்தோன் என்று
சிங்கார வேலனடி சிந்தனைசெய் வாமே (28)

மாவலங் காதிருக் கோலன் ஐங்கை
மதகஜ முகற்கிளைய வன்சத்தி பாலன்
சேவலந் துவசனணு கூலன் என்று
சிங்கார வேலனடி சிந்தனைசெய் வாமே (29)

வீரப்ர தாபசெய துங்கன் துதிசெய்
விபுதர்நிலை பெறவசுர சமர்விஜய சிங்கன்
சீர்திகழ் செழுந்தமிழ்ப்ர சங்கன் என்று
சிங்கார வேலனடி சிந்தனைசெய் வாமே (30)

கறைமிடற் றிறைவர்தவ புத்ரன் ஒருமன்
கருதலறை வென்றிபெற வருள்புட்ப சத்ரன்
சிறைநடன கலபமிவர் சித்ரன் என்று
சிங்கார வேலனடி சிந்தனைசெய் வாமே (31)

சதாசிவத் திதயகுகை வாசன் மிர்த்திஞ்
சயமனுவைக் கபிலமா தவனுக்குப தேசன்
சிதாகாச நடனப்ர காசன் என்று
சிங்கார வேலனடி சிந்தனைசெய் வாமே (32)

மூவர்முத லாகிவளர் தூயன் பொதிகை
முனிவர்க் குபதேச மொழிபவள வாயன்
தேவர்சே னைக்கொருச காயன் என்று
சிங்கார வேலனடி சிந்தனைசெய் வாமே (33)

கங்கையணி சடையானைம் முகவன் பெற்ற
கந்தனிந் திராதியர் வணங்கரதி பகவன்
செங்கண்மால் மருகனறு முகவன் என்று
சிங்கார வேலனடி சிந்தனைசெய் வாமே (34)

பச்சைமயி லேறிவரும் பதத்தான் உமையாள்
பாலனென்னை யாட்கொண்ட பன்னிரு கரத்தான்
செச்சைமலர் மாலையணி புயத்தான் என்று
சிங்கார வேலனடி சிந்தனைசெய் வாமே (35)

சண்முகத் திருவுருவங் கொண்டோன் அன்பர்
தனதுவினை தீர்த்துநிறை வாழ்வுதருகின்றோன்
திண்புயத் தவுணர்களை வென்றோன் என்று
சிங்கார வேலனடி சிந்தனைசெய் வாமே (36

வேதபா சகர்புரவு தமரன் அன்றில்
வெற்பினொடு தாரகனை வெற்றிபெறு சமரன்
சீதரே சன்பெற்ற குமரன் என்று
சிங்கார வேலனடி சிந்தனைசெய் வாமே (37]

பாசபந் தங்கடேறு குணத்தான் திவ்ய
பழமறையின் முடிவிலமர் மயில்வா கனத்தான்
தேசமுழு வதுங்காக்கு மனத்தான் என்று
சிங்கார வேலனடி சிந்தனைசெய் வாமே (38)

வள்ளிதெய்வ யானைபணி காந்தன் சத்தி
மான்ஞான பண்டிதன் மஹத்வகுண சாந்தன்
தெள்ளுமறை முடிவிலமர் வேந்தன் என்று
சிங்கார வேலனடி சிந்தனைசெய் வாமே (39)

எப்பொழுதுங் குன்றக்குடி யிருப்பான் சரணென்
றெய்துமடி யார்குற்ற மெல்லாம் பொறுப்பான்
செப்புமிமை யவரிட ரறுப்பான் என்று
சிங்கார வேலனடி சிந்தனைசெய் வாமே (40)

வந்தவரை யாதரிக்குங் கொடையான் பச்சை
மயிலேறிக் கணத்திலகை வலம்வந்த நடையான்
செந்தின்மரு வுங்கருணை யுடையான் என்று
சிங்கார வேலனடி சிந்தனைசெய் வாமே (41)

ஞானசத்தி தான்குகன்வி சாகன் குறைசொல்
நாரதன் மகத்தகர் நடாத்துமுற் சாகன்

தேனலர் கடம்பணியும் போகன் என்று
சிங்கார வேலனடி சிந்தனைசெய் வாமே (42)

துன்னலரை வென்றிபெறு மையன் கருணைச்
சுகந்தகுந்த ளாம்பிகை யளித்தருரு கையன்
சென்னியோ ராறுடைய மெய்யன் என்று
சிங்கார வேலனடி சிந்தனைசெய் வாமே (43)

வையமுழு தும்பாவு கீர்த்தானன் சர்வ
மங்கள காத்துலகை வைத்திடு குணாளன்
தெய்வகுஞ் சரியின்ம ணாளன் என்று
சிங்கார வேலனடி சிந்தனைசெய் வாமே (44)

சத்தியுமை யவளீன்ற புதல்வன் ஓம்
சரவண பவாவெனு மஹாமந்த்ர முதல்வன்
சித்திபுரி சத்திகிரித் தலைவன் என்று
சிங்கார வேலனடி சிந்தனைசெய் வாமே (45)

மயூரகிரி யாந்த்வ்ய தலத்தான் வீர
வாகுவிற் கொளிர்சர்வ விபுத்துவ மளித்தான்
செயவஜ்ர வடிவே லெடுத்தான் என்று
சிங்கார வேலனடி சிந்தனைசெய் வாமே (46)

அட்டதிசை சுற்றிவரு மயிலான் கொடிய
அவுணர்கள் குழாத்தைவென் றருள்சத்தி யயிலான்
சிட்டருக் கருள்புரியு மொயிலான் என்று
சிங்கார வேலனடி சிந்தனைசெய் வாமே (47)

மன்றல்கமழ் நீபமலர் மார்பன் வெற்றி
வல்லிடும்பன் றனையாண்ட வரதனருட் சார்வன்
தென்றல்வரை முனிபணியுமார்வன் என்று
சிங்கார வேலனடி சிந்தனைசெய் வாமே (48)

கலிகால மதில்விளங்கு வரதன் சிவ
காருண்ய னன்பரிடர் தீர்புண்ய விரதன்
திலகமறை முடிவிலமர் சாதன் என்று
சிங்கார வேலனடி சிந்தனைசெய் வாமே (49)

சங்கரிதன் மகனா யுதித்தோன் சர்வ
தத்துவா தீதன் சுகன்சடாட் சரத்தோன்
சிங்கமுக சூரனை வதைத்தோன் என்று
சிங்கார வேலனடி சிந்தனைசெய் வாமே (50)

ஆறுபடை வீட்டினிலு மமர்வோன் பொதிகை
யகத்தியர்க்குச் செந்தமிழை யுபதேசம் பகர்வோன்
சீறும்வினை நீக்கியெங்கு நிறைவோன் என்று
சிங்கார வேலனடி சிந்தனைசெய் வாமே (51)

நவவீரர் துணையான கந்தன் எந்த
நாளுமுத் தொழின்முறை நடாத்துமுமை மைந்தன்
சிவகிரியை மருவிவளர் சொந்தன் என்று
சிங்கார வேலனடி சிந்தனைசெய் வாமே (52)

கந்தவேற் பரசுபுரி முருகன் கந்தன்
கார்த்திகே யன்குமரன் கரியமால் மருகன்
சிந்தா குலந்தவிர்க்கு மொருவன் என்று
சிங்கார வேலனடி சிந்தனைசெய் வாமே (53)

ஆடுமயி லேறுமலர்ப் பாதன் சுத்த
அத்துவித மெய்ஞ்ஞான தத்வகுரு நாதன்
தேடுவார்க் கருள்வரப்ர சாதன் என்று
சிங்கார வேலனடி சிந்தனைசெய் வாமே (54)

அண்டர்துதி புரியுமதி காரன் திரு
வாவினன் குடியில்விளை யாடுமொய் யாரன்
தெண்டா யுதம்பிடித்த தீரன் என்று
சிங்கார வேலனடி சிந்தனைசெய் வாமே (55)

சங்கீதப் பிரியவர சுகுண ருத்ர
சன்மணுத் தமிழ்ச்சங்கத் தலைமைபகர்நிபுண
செங்கமல நிகருபய சரண என்று
சிங்கார வேலனடி சிந்தனைசெய் வாமே (56)

ஓராறு மாமுகத்தைக் கொள்வோன் புகலும்
ஓங்காரத் துட்பொருளைப் பரமனுக்குச் சொல்வோன்

தீராத வினைதீர்க்க வல்லோன் என்று
சிங்கார வேலனடி சிந்தனைசெய் வாமே (57)

சூரன்முதல் வல்லவுண கோபன் மொய்த்துச்
சுழலளிகள் முரலுநறு மலரணியு நீபன்
தீரன்விண் ணவர்கள்குல தீபன் என்று
சிங்கார வேலனடி சிந்தனைசெய் வாமே (58)

சாமிநா தன்குமர னித்தன் மணலைச்
சற்கரைய தாச்செயெல் லாம்வல்ல சித்தன்
தேமலர்ப் பொழிற்சுவேத புரத்தன் என்று
சிங்கார வேலனடி சிந்தனைசெய் வாமே (59)

மகிமைக ளியற்றுமுரு கேசன் அட்ட
மாசித்தி வல்லப மஹாத்வப்ரகாசன்
திகழ்பாண்டு புரநகர வாசன் என்று
சிங்கார வேலனடி சிந்தனைசெய் வாமே (60)

சத்துரு சங்காரஞ் செய்திடும்வேல் மாயத்
தாரகன் சிங்கமுகனுடு சூரனுயிர் தெறுவேல்
சித்திமுத் திகளீயுமெல் மிடுவேல் என்று
சிங்கார வேல்மகிமை சிந்தனைசெய் வாமே (61)

உக்ரகெம் பீரரண ஜெயவேல் புகலு
மும்பர்துதி வம்பவிழ் கடம்பணியும் வடிவேல்
திக்கனைத்தும் பரவுமொளி திகழ்வேல் என்று
சிங்கார வேல்மகிமை சிந்தனைசெய் வாமே (62)

தொண்டர்க டுதிக்குமற் புதவேல் தன்னைத்
துதிவிபுதர் குடியேற்று மதிவிசித் திரவேல்
திண்டிறற் செயதுங்க வடிவேல் என்று
சிங்கார வேல்மகிமை சிந்தனைசெய் வாமே (63)

இடும்பனை யடர்த்தடிமை கொளும்வேல் சிகண்டிக்
கிடர்செய்கரி தனைவெல்ல வெய்யும்வெற் றிலைவேல்
திடப்புரி வியாக்ரசுர ஜெயவேல் என்று
சிங்கார வேல்மகிமை சிந்தனைசெய் வாமே (64)

வாசவன் பதவியீந் தருள்வேல் இரி
மலிருளகற்றுதின கரஞான வடிவேல்
தேசுலவு ஞானசத்தி தருவேல் என்று
சிங்கார வேல்மகிமை சிந்தனைசெய் வாயே (65)

விண்ணவர் தமக்குதவி செய்யும்வேல் நவ
வீரரொடு துணையாகி விளையாடல் புரிவேல்
திண்ணிலவல் லசுரரைவென் றிடுவேல் என்று
சிங்கார வேல்மகிமை சிந்தனைசெய் வாயே (66)

அருணகிரி செந்தமிழுக் கருள்வேல் சர்வ
அண்டபகி ரண்டமுங் கொண்டாடல் புரிவேல்
செருவிலெதிர் தரியலரை யடுவேல் என்று
சிங்கார வேல்மகிமை சிந்தனைசெய் வாயே (67)

கீரர்சிறை மீட்டுவித் தருள்வேல் கருட
கேதனு தியவிபுதர் கேட்கும்வரந் தருவேல்
தீரமயில் வீரன்செங் கரவேல் என்று
சிங்கார வேல்மகிமை சிந்தனைசெய் வாயே (68)

அமரரிடர் தீரவமர் புரிவேல் வேண்டும்
அடியவர்கள் வல்வினை யகற்றுசுடர் வடிவேல்
இமயமலை மகளருள் கதிர்வேல் என்று
சிங்கார வேல்மகிமை சிந்தனைசெய் வாயே (69)

கனகவரை முடிசிதற வடர்வேல் மதுரைக்
கடிநகரின் வருணன்விடு கடல்வற் றிடுவேல்
தினகரோ தயமெனவொளிர்வேல் என்று
சிங்கார வேல்மகிமை சிந்தனைசெய் வாயே (70)

சத்திமான் மூர்த்தே நமோநம் ஞான
சத்திதர பன்னிரு கரத்தாய் நமோநம்
சித்ரமயில் வாகன நமோநம் என்று
சிங்கார வேலனடி சிந்தனைசெய் வாயே (71)

அவுசிகர்க் கருள்குக நமாஓம் வலிய
கஜாருட ப்ரியகரு ணாகர நமாஓம்
சிவயமந் த்ராட்சர நமாஓம் என்று
சிங்கார வேலனடி சிந்தனைசெய் வாமே (72)

சம்பந்த குருவே நமாஓம் சைவ
சமயகுல திலகசிவ தனயர் நமாஓம்
செம்பவள வடிவா நமாஓம் என்று
சிங்கார வேலனடி சிந்தனைசெய் வாமே (73)

வன்னமா யூரா நமாஓம் அள்ளி
மணலைவென் றீறுசெயும் வாதர் நமாஓம்
தென்னவன் பணிகுக நமாஓம் என்று
சிங்கார வேலனடி சிந்தனைசெய் வாமே (74)

அருமறைப் பொருளே நமாஓம் முருக
அம்மையர்க் கற்றலை யளித்தாய் நமாஓம்
திருமகடன் மருகா நமாஓம் என்று
சிங்கார வேலனடி சிந்தனைசெய் வாமே (75)

ஞானதே சிகருக நமாஓம் இந்த்ர
ஞாலரத மேறிவரு கோலா நமாஓம்
சேனாதி பதியே நமாஓம் என்று
சிங்கார வேலனடி சிந்தனைசெய் வாமே (76)

குகபரம மூர்த்தே நமாஓம் சுகந்த
குந்தளாம் பிகைபிரிய மைந்தா நமாஓம்
செகத்குரவ னேய்நமாஓம் என்று
சிங்கார வேலனடி சிந்தனைசெய் வாமே (77)

சித்ரேச் சரஉவமையாள் வாழ்க வள்ளி
தெய்வகுஞ் சரிசெவ்வேள் தம்பதியும் வாழ்க
சோமா திகத்தலபம் வாழ்க சேவற்
துவசமொடு சிங்கார வடிவேலும் வாழ்க (78)

அருள்செய்நவ வீரர்களும் வாழ்க வெற்றி
யடையுக்ர கெம்பீர வல்விடும்பன் வாழ்க
சுரர்முனிவர் மறையவரும் வாழ்க என்றுஞ்
சுவேதபுர க்ஷேத்திரந் தொழுமடியர் வாழ்க (79)

ஐந்தெழுத்தும் வெண்ணீறும் வாழ்க வுருத்தி
ராக்கமணி பணிசைவத்தம்புவியும் வாழ்க
கந்தனிச் செந்தமிழும் வாழ்க சென்னெற்
கதிர்விளை தாத்தரும மேலோங்கி வாழ்க (80)

## சிங்கார வேலவர் தோத்திர

### ஆனந்தக் களிப்பு

முற்றிற்று

வேலுமயிலுந் துணையுண்டு